இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை தீர்ப்பாயம், கோவில்பட்டி

முன்னிலை: திரு. D.மாரிக்காளை, B.Sc.M.L.,
இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை
தீர்ப்பாய நடுவர் (சார்பு நீதிபதி) கோவில்பட்டி

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

1) MCOP No.1/2018

[CNR No: TNTT050000072018]

மற்றும்

2) MCOP No.2/2018

[CNR No: TNTT05-000212018]

1	MCOP No.1/2018 மனுவில் மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி	**1. கவிதா, [வயது 33/2018],** க/பெ.P.அம்சுக்கண்ணன், த/பெ.லேட்.பாண்டியன், கதவு எண்.5/64, சங்கிலிகருப்பு கோவில் தெரு, M.கல்லுப்பட்டி கிராமம், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். 2. **சந்துருபாண்டியன், [வயது சுமார் 31/2018],** த/பெ.லேட்.பாண்டியன், கதவு எண்.4/201, சங்கிலிகருப்பு கோவில் தெரு, M.கல்லுப்பட்டி கிராமம், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். 3. **செல்வம், [வயது சுமார் 28/2018],** த/பெ.லேட்.பாண்டியன், கிளை மேலாளர், சிட்டி யூனியன் பேங்க், கோவில்பட்டி, வெங்கடேஷ் நகர் 2 வது தெரு, கோவில்பட்டி டவுண்.
2	எதிர்மனுதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரி	**1. முகமது முஷ்தாக், வயது 34** த/பெ.ஹினாயதுல்லாஹ் கதவு எண்.35/22, சுந்தரமூர்த்தி,

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:09:41 +0530

		விநாயகர் தெரு, மக்கன்சந்து, செங்கல்பட்டு. **2. யுனைனேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், செங்கல்பட்டு** அதன் கிளை மேல◌ாளர் மூலம்
3	MCOP No.1/2018 மனுவில் மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி	**1. கவிதா, [வயது 33/2018],** க/பெ.P.அம்சுக்கண்ணன், த/பெ.லேட்.பாண்டியன், கதவு எண்.5/64, சங்கிலிகருப்பு கோவில் தெரு, M.கல்லுப்பட்டி கிராமம், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். 2. **சந்துருபாண்டியன், [வயது சுமார் 31/2018],** த/பெ.லேட்.பாண்டியன், கதவு எண்.4/201, சங்கிலிகருப்பு கோவில் தெரு, M.கல்லுப்பட்டி கிராமம், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். 3. **செல்வம், [வயது சுமார் 28/2018],** த/பெ.லேட்.பாண்டியன், கிளை மேலாளர், சிட்டி யூனியன் பேங்க், கோவில்பட்டி, வெங்கடேஷ் நகர் 2 வது தெரு, கோவில்பட்டி டவுண்.
4	எதிர்மனுதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரி	**1. முகமது முஷ்தாக், வயது 34** த/பெ.ஹினாயதுல்லாஹ் கதவு எண்.35/22, சுந்தரமூர்த்தி, விநாயகர் தெரு, மக்கன்சந்து, செங்கல்பட்டு.y **2. யுனைனேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், செங்கல்பட்டு** அதன் கிளை மேலாளர் மூலம்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:09:45 +0530

5	காப்பீடு நிறுவனத்தின் பெயர் மற்றும் கம்பெனியின் முகவரி	**யுனைனேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், செங்கல்பட்டு** அதன் கிளை மேலாளர் மூலம், கதவு எண்.7A, வரதநார் தெரு, வேதசட்ட நகர், செங்கல்பட்டு.
6	போக்குவரத்து கழகம் அல்லது இதர எதிர்மனுதாரர்கள் மற்றும் இழப்பீடு செலுத்த வேண்டியவர்களின் பெயர் மற்றும் முகவரி	**யுனைனேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், செங்கல்பட்டு**
7	கோரிருரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்	20.12.2017
8	தீர்வளிப்பு நாள்	**23.06.2026**
9	தீர்வளிப்பு தொகை	**1) MCOP No.1/2018 – ரூ.15,16,956/–** **2) MCOP No.2/2018 – ரூ.1984908/–**
10	வட்டி விகிதம்	7.5% ஆண்டுக்கு
11	வட்டி செலுத்தப்பட தொடங்கும் நாள்	20.12.2017
12	செலவுவிபரப்பட்டியல்	**1) MCOP No.1/2018** நீதிமன்ற கட்டணம் – ரூ.14543/– வக்காலத்து – ரூ. 5/– வழக்கறிஞர் கட்டணம் – ரூ.22170/– ரூ.36718/– **2) MCOP No.2/2018** நீதிமன்ற கட்டணம் – ரூ.19222/– வக்காலத்து – ரூ. 5/– வழக்கறிஞர் கட்டணம் – ரூ.26850/– ரூ.46077/–
13	இழப்பீடு தொகை மற்றும் வட்டிவிகிதம், செலவுத்தொகை விகிதாச்சார அடிப்படையில் செலுத்த வேண்டியதாக இருந்தால், யார் எவ்வளவு செலுத்த வேண்டும் என குறிப்பிட வேண்டியது	**1) MCOP No.1/2018** 2 வது எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.15,16,956/– செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:09:49 +0530

		<u>2) MCOP No.2/2018</u> 2வது எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.19,84,908/- செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
14	மனுவில் பல மனுதாரர்கள் இருக்கும் சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒவ்வொருக்கும் செலுத்த வேண்டிய பங்கு மற்றும் தொகைகள் குறிப்பிட வேண்டும்	இல்லை
15	இழப்பீடு வைப்பீடு செய்ய வேண்டிய முறை	இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் இத்தீர்ப்பாயத்தின் சேமிப்பு [Savings Account] வங்கி கணக்கான, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கோவில்பட்டி கிளை, MACT, Account No.00000042891482655-ல் இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
16	இழப்பீடு வழங்கும் முறை	மனுதாரர்களுக்குரிய இழப்பீட்டு தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் 3 ஆண்டுகளுக்கு வைப்பீடு செய்து, அதில் வரும் வட்டியை மனுதாரர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பெற்றுக்கொள்ளலாம்
17	மனுதாரரின் தவறுகைக்காக மனு தள்ளுபடி ஏதேனும் செய்திருந்தால், அந்த காலத்திற்குரிய வட்டியை பெற மனுதாரருக்கு கோருரிமை கிடையாது	இல்லை

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:09:53 +0530

18	செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்றக்கட்டணம்	**1) MCOP No.1/2018** மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணமாக ரூ.374/- செலுத்தியுள்ளார். மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்குரிய மீதி நீதிமன்றக் கட்டணம் ரூ.14170/-ஐ இன்றிலிருந்து இரண்டு வாரத்திற்குள் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும். **2) MCOP No.2/2018** மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணமாக ரூ.374/- செலுத்தியுள்ளார். மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்குரிய மீதி நீதிமன்றக் கட்டணம் ரூ.18849 /-ஐ இன்றிலிருந்து இரண்டு வாரத்திற்குள் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும். மனுதாரர்கள் மீதி நீதிமன்ற கட்டணத்தை இத்தீர்ப்பாயத்தில் செலுத்தாதபட்சத்தில் மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாரர்கள் பெற்றுக்கொள்ள முடியாது

1) MCOP No.1/2018

1. கவிதா
2. சந்துரு பாண்டியன்
3. செல்வம் ... மனுதாரர்கள்

/எதிர்/

1. முகமது மஷ்தாக்
2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   அதன் கிளை மேலாளர் மூலம் ... எதிர்மனுதாரர்கள்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:09:57 +0530

2) MCOP No..2/2018

1. கவிதா
2. சந்துரு பாண்டியன்
3. செல்வம் ... மனுதாரர்கள்

/எதிர்/

1. முகமது மஷ்தாக்
2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
அதன் கிளை மேலாளர் மூலம் ... எதிர்மனுதாரர்கள்

இந்த இயக்க ஊர்தி விபத்துக் கோரிக்கை அசல் மனுக்களான MCOP.No.1/2018 மற்றும் MCOP.No.2/2018 ஆகிய இருவழக்குகளையும் ஒன்றாக நடத்துவற்கு மனுதாரர்கள் தரப்பில் கடந்த 25.02.2020ம் தேதியன்று மெமோ தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில், மேற்படி மெமோவானது அதே தேதியில் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு மேற்படி இருஅசல்மனுக்களையும் ஒன்றாக நடத்தி இத்தீர்ப்பாயத்தின் முன்பு 24.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.V.சம்பத்குமார், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கறிமாலா பாஷா, அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்தும், 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்றியும் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பாப்புராஜ், அவர்களும் ஆஜராகியும், மேற்படி முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இருதரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும் இன்றுவரை என் பரிசீலணையிலிருந்து இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்.

பொதுவான தீர்வளிப்பு [AWARD]

1. MCOP NO.1/2018 மனுவில் விபத்தில் இறந்துபோன பாண்டியன் என்பவருக்கு விபத்து இழப்பீடாக எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு ரூ.20,00,000/- செலுத்தவும் ஷை தொகைக்கு மனு தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை 12% வீதம் வட்டி செலுத்தும்படிக்கும் மற்றும்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:02 +0530

இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும் மனுதாரரால் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. MCOP NO.1/2018 மனுவில் விபத்தில் இறந்துபோன அம்சவள்ளி என்பவருக்கு விபத்து இழப்பீடாக எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு ரூ.20,00,000/- செலுத்தவும் ஷை தொகைக்கு மனு தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை 12% வீதம் வட்டி செலுத்தும்படிக்கும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும் மனுதாரரால் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **MCOP No.1/2018 அசல்மனுவின் சுருக்கம்:-**

i) இந்த மனுவில் சம்பந்தப்பட்ட விபத்தில் இறந்துபோன பாண்டியன் என்பவர் இம்மனுவின் மனுதார்களின் தந்தை ஆவார். மனுதாரர்களின் பெற்றோர்கள் கடந்த 07.05.2016 ம் தேதி 3 ம் மனுதாரரின் வீட்டிற்கு வந்து தங்கி இருந்துவிட்டு 08.05.2016 ம் தேதி அவர்களது சொந்த ஊருக்கு வழியனுப்புவதற்காக 3 ம் மனுதாரர், அவர்களுடன் இரவு 11.15 மணிக்கு மகேந்திர வேர்ல்ட் சிட்டி சந்திப்புக்கு வந்தபோது அங்கு மனுதாரர்களின் பெற்றோர்கள் பேருந்து நிறுத்தத்திற்கு செல்வதற்காக செங்கல்பட்டு தாம்பரம் சாலையை கடந்து பின்பு தாம்பரம் செங்கல்பட்டு சாலையை கடக்க முயன்றபோது மனுவின் 1 ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN18-1706 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகா காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றாமலும் ஓட்டிவந்து மனுதாரர்களின் பெற்றோர் மீது மோதியதில் அவர்கள் இருவரும் தூக்கி எறியப்பட்டு ரத்த காயங்களுடன் கீழே விழுந்தனர். உடனே 3 ம் மனுதாரரும், நண்பர்களும் சென்று பார்த்தபோது மனுதாரர்களின் தந்தைக்கு தலையிலும், இடதுகையிலும், ரத்தகாயம் ஏற்பட்டு உயிருக்கு போராடிகொண்டு இருந்தார். மனுதாரர்களின் தாயாருக்கு இடதுபக்க தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மனுதாரர்களின் தகப்பனாரும் சிறிது நேரத்தில்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:05 +0530

சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், மேற்படி விபத்து சம்பந்தமாக மறைமலைநகர் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஒட்டுநருக்கு எதிராக குற்ற எண்.386/2016 இ.த.ச.பிரிவுகள் 279 மற்றும் 304(A) என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

ii) விபத்தின்போது மேற்படி மனுதாரர்களின் தந்தைக்கு வயது 54 மற்றும் தாய்க்கு வயது 46. மனுதாரர்களின் தாய், தந்தை இருவருக்கும் தனித்தனியாக சுமார் 10 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் இருக்கின்றன. அதுபோக மற்ற நில உரிமையாளர்களிடமிருந்து சுமார் 20 ஏக்கர் நிலத்திற்கும் அதிகமான நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயம் செய்து வந்ததோடு தனியாக பால்பண்ணையும் நடத்தி வந்து அதன் மூலம் அவர்கள் இருவரும் தலா மாதம் 1க்கு ரூ.20,000/-க்கு மேல் சம்பாத்தியம் செய்து வந்தனர். மேற்படி வாகன விபத்து 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுநனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து காலத்திலும் மேற்படி காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்து வந்தது. எனவே மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் ரூ.20,00,000/- இழப்பீடு வழங்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. MCOP No.2/2018 அசல்மனுவின் சுருக்கம்:-

i) இந்த மனுவில் சம்பந்தப்பட்ட விபத்தில் இறந்துபோன அம்சவள்ளி என்பவர் இம்மனுவின் மனுதார்களின் தாய் ஆவார். மனுதாரர்களின் பெற்றோர்கள் கடந்த 07.05.2016ம் தேதி 3ம் மனுதாரரின் வீட்டிற்கு வந்து தங்கி இருந்துவிட்டு 08.05.2016ம் தேதி அவர்களது சொந்த ஊருக்கு வழியனுப்புவதற்காக 3ம் மனுதாரர், அவர்களுடன் இரவு 11.15 மணிக்கு மகேந்திர வேர்ல்ட் சிட்டி சந்திப்புக்கு வந்தபோது அங்கு மனுதாரர்களின் பெற்றோர்கள் பேருந்து நிறுத்தத்திற்கு செல்வதற்காக செங்கல்பட்டு தாம்பரம் சாலையை

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:09 +0530

கடந்து பின்பு தாம்பரம் செங்கல்பட்டு சாலையை கடக்க முயன்றபோது மனுவின் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN18–1706 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகா காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றாமலும் ஓட்டிவந்து மனுதாரர்களின் பெற்றோர் மீது மோதியதில் அவர்கள் இருவரும் தூக்கி எறியப்பட்டு ரத்த காயங்களுடன் கீழே விழுந்தனர். உடனே 3ம் மனுதாரரும், நண்பர்களும் சென்று பார்த்தபோது மனுதாரர்களின் தந்தைக்கு தலையிலும், இடதுகையிலும், ரத்தகாயம் ஏற்பட்டு உயிருக்கு போராடிகொண்டு இருந்தார். மனுதாரர்களின் தாயாருக்கு இடதுபக்க தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மனுதாரர்களின் தகப்பனாரும் சிறிது நேரத்தில் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், மேற்படி விபத்து சம்பந்தமாக மறைமலைநகர் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக குற்ற எண்.386/2016 இ.த.ச.பிரிவுகள் 279 மற்றும் 304(A) என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

ii) விபத்தின்போது மேற்படி மனுதாரர்களின் தந்தைக்கு வயது 54 மற்றும் தாய்க்கு வயது 46. மனுதாரர்களின் தாய், தந்தை இருவருக்கும் தனித்தனியாக சுமார் 10 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் இருக்கின்றன. அதுபோக மற்ற நில உரிமையாளர்களிடமிருந்து சுமார் 20 ஏக்கர் நிலத்திற்கும் அதிகமான நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயம் செய்து வந்ததோடு தனியாக பால்பண்ணையும் நடத்தி வந்து அதன் மூலம் அவர்கள் இருவரும் தலா மாதம் 1க்கு ரூ.20,000/–க்கு மேல் சம்பாத்தியம் செய்து வந்தனர். மேற்படி வாகன விபத்து 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுநனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து காலத்திலும் மேற்படி காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்து வந்தது. எனவே

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:13 +0530

மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் ரூ.20,00,000/— இழப்பீடு வழங்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. MCOP No.1/2018 மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்—

மனுதார்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. காரின் ஓட்டுநருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்கில் 3 வது மனுதாரர் முதல் சாட்சியாக உள்ளார். காரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலால் விபத்து ஏற்பட்டது என்று 3 வது மனுதாரரும் மற்ற சாட்சிகளும் தெளிவாகக் கூறவில்லை. குற்றவியல் வழக்கு குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதகமாக முடிந்தது. மேலும், விபத்து நடந்த இடம் செங்கல்பட்டு, ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள மஹிந்திரா சிட்டி சந்திப்பு ஆகும். அந்தச் சந்திப்பை நெருங்கும் போது, வடக்கு மற்றும் தெற்கு நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும் தங்கள் வேகத்தைக் குறைத்து, கவனமாகத்தான் செல்லும் நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதாக கூறுவது ஏற்புடையதல்ல. மேலும், செங்கல்பட்டு, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் II—ன் பதிவேட்டில் உள்ள குற்றவியல் வழக்கு எண் 222/2016 வழக்கில் இம்மனுவின் 3ம் மனுதாரர் அளித்த சாட்சியத்தில், வடக்கிலிருந்து தெற்காக வரும் வாகனங்கள் மீது மனுதாரர்களின் பெற்றோர் அதிக கவனம் செலுத்தியிருந்தால், விபத்து நடந்திருக்காது என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். குற்றவியல் வழக்குத் தீர்ப்பைப் படித்துப் பார்க்கையில், விபத்தை நேரடியாக பார்த்ததாக எந்த சாட்சியம் குறிப்பிட்டு கூறவில்லை என்பதும், மேற்படி வாகன விபத்திற்கு காரின் ஓட்டுநர் மட்டுமே பொறுப்பு என்பதையும், அவரது அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலையும் நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்பதும் மிகவும் தெளிவாகிறது.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:18 +0530

முதல் தகவல் அறிக்கையிலும்கூட 3ம் மனுதாரர், தங்கள் தந்தை மேற்கிலிருந்து கிழக்காகச் சாலையைக் கடக்க முயன்றதாகப் புகார் அளித்துள்ளார். இவ்வாறு, மனுதாரர்களின் பெற்றோரின் கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து நிகழ்ந்துள்ளது. கோரப்பட்ட இழப்பீடு மிகவும் அதிகமானது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் பதிவு எண் T.N.18 7106 கொண்ட வாகனத்திற்கு, 2ம் எதிர்மனுதாரரிடம் பாலிசி எண் 0128003115P105022003–ன் கீழ் 02.07.2015 முதல் 01.07.2016 வரையிலான காலத்திற்கு காப்பீடு செய்துள்ளார். மனுதாரர்களுக்குச் சாதகமாக ஏதேனும் தீர்ப்பு வழங்கப்படும் பட்சத்தில், வட்டிச் சட்டத்தின் பிரிவு 2(b)–இல் வரையறுக்கப்பட்டுள்ள தற்போதைய வட்டி விகிதத்தைத் தாண்டாத வகையில் வட்டி அனுமதிக்கலாம். எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>6. MCOP No.1/2018 மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்–</u>

மனுதார்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் என்பது பொதுமக்களிடமிருந்து பிரீமியத்தை வசூலிக்கும் ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். மேலும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுனரால் விபத்து ஏற்பட்டது என்பதையும் அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையெனில், 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப் பொறுப்பு கிடையாது. விபத்து நடந்த நேரத்தில் இறந்தவருக்கு 54 வயது என்பதையும், அவர் விவசாயத்தின் மூலம் சுயதொழிலாக ரூ.20,000/– சம்பாதித்தார் என்பதையும் மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். மேலும், இறந்தவர் ஒரு விவசாயி என்பதையும், அவருக்குச் சொந்தமான சொந்த ஊரில் 10 ஆண்டுகளாகத் தோட்ட நிலம் இருந்தது என்பதையும், சாகுபடி செய்வதற்காக மற்ற நில உரிமையாளர்களிடமிருந்து 20 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:22 +0530

எடுத்திருந்தார் என்பதையும் மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். இறந்தவரும் அவரது மனைவியும் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றாமல் திடீரென சாலையைக் கடந்ததால், அவர்களே விபத்தை வரவழைத்துக் கொண்டனர். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அந்த விபத்திற்குக் காரணமல்ல. இறந்தவரின் கவனக்குறைவான செயலால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது. 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கக் கடமைப்பட்டவர் அல்ல. 1ம் மனுதாரர் திருமணமானவர் என்றும், அவர் தனது கணவருடன் வசித்து வருகிறார் என்றும், அவர் இறந்தவரின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்பதும் தெரியவருகிறது. மனுவின் பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரரால் கோரப்பட்ட இழப்பீடு மிகவும் மிகையானதாகவும். எனவே மனுவானது 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. **MCOP No.2/2018 மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்–**

மனுதார்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. காரின் ஓட்டுநருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்கில் 3வது மனுதாரர் முதல் சாட்சியாக உள்ளார். காரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலால் விபத்து ஏற்பட்டது என்று 3வது மனுதாரரும் மற்ற சாட்சிகளும் தெளிவாகக் கூறவில்லை. குற்றவியல் வழக்கு குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதகமாக முடிந்தது. மேலும், விபத்து நடந்த இடம் செங்கல்பட்டு, ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள மஹிந்திரா சிட்டி சந்திப்பு ஆகும். அந்தச் சந்திப்பை நெருங்கும் போது, வடக்கு மற்றும் தெற்கு நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும் தங்கள் வேகத்தைக் குறைத்து, கவனமாகத்தான் செல்லும் நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதாக கூறுவது ஏற்புடையதல்ல. மேலும், செங்கல்பட்டு, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் II–ன்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:27 +0530

பதிவேட்டில் உள்ள குற்றவியல் வழக்கு எண் 222/2016 வழக்கில் இம்மனுவின் 3ம் மனுதாரர் அளித்த சாட்சியத்தில், வடக்கிலிருந்து தெற்காக வரும் வாகனங்கள் மீது மனுதாரர்களின் பெற்றோர் அதிக கவனம் செலுத்தியிருந்தால், விபத்து நடந்திருக்காது என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். குற்றவியல் வழக்குத் தீர்ப்பைப் படித்துப் பார்க்கையில், விபத்தை நேரடியாக பார்த்ததாக எந்த சாட்சியம் குறிப்பிட்டு கூறவில்லை என்பதும், மேற்படி வாகன விபத்திற்கு காரின் ஓட்டுநர் மட்டுமே பொறுப்பு என்பதையும், அவரது அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலையும் நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்பதும் மிகவும் தெளிவாகிறது. முதல் தகவல் அறிக்கையிலும்கூட 3ம் மனுதாரர், தங்கள் தந்தை மேற்கிலிருந்து கிழக்காகச் சாலையைக் கடக்க முயன்றதாகப் புகார் அளித்துள்ளார். இவ்வாறு, மனுதாரர்களின் பெற்றோரின் கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து நிகழ்ந்துள்ளது. கோரப்பட்ட இழப்பீடு மிகவும் அதிகமானது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் பதிவு எண் T.N.18 7106 கொண்ட வாகனத்திற்கு, 2ம் எதிர்மனுதாரரிடம் பாலிசி எண் 0128003115P105022003–ன் கீழ் 02.07.2015 முதல் 01.07.2016 வரையிலான காலத்திற்கு காப்பீடு செய்துள்ளார். மனுதாரர்களுக்குச் சாதகமாக ஏதேனும் தீர்ப்பு வழங்கப்படும் பட்சத்தில், வட்டிச் சட்டத்தின் பிரிவு 2(b)–இல் வரையறுக்கப்பட்டுள்ள தற்போதைய வட்டி விகிதத்தைத் தாண்டாத வகையில் வட்டி அனுமதிக்கலாம். எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>8. MCOP No.2/2018 மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்–</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும், மேலும் அது பொதுமக்களிடமிருந்து பிரீமியத்தை வசூலிக்கும் ஒரு இயங்கும்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:32 +0530

நிறுவனமாகும்.மேலும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுனரால் விபத்து ஏற்பட்டது என்பதையும் அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையெனில், 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப் பொறுப்பு கிடையாது. இறந்த அம்சாவல்லி ஒரு விவசாயி என்பதையும், அவர் தனது சொந்த ஊரான M.கல்லுப்பட்டி கிராமத்தில் 10 ஏக்கருக்கும் அதிகமான தோட்ட நிலத்தை வைத்திருந்தார் என்பதையும், மேலும் அவர் சாகுபடிக்காக மற்ற உரிமையாளர்களிடமிருந்து 20 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார் என்பதையும், அவர் அந்த நிலங்களின் ஒரு பகுதியில் பால் பண்ணை நடத்தி வந்தார் என்பதையும், மேலும் அவர் மாதம் ரூ.20,000/- மற்றும் அதற்கு மேல் சம்பாதித்தார் என்பதையும் மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். மேலும், விபத்து நடந்த நேரத்தில் இறந்த அம்சாவல்லிக்கு 46 வயது என்பதை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். மேலும், விபத்தின் காரணமாக இறந்தவரின் சங்கிலி மற்றும் கைக்கடிகாரம் சேதமடைந்தன என்பதையும் மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும். இறந்தவரும் அவரது மனைவியும் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றாமல் திடீரென சாலையைக் கடந்ததால், அவர்களே விபத்தை வரவழைத்துக் கொண்டனர். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அந்த விபத்திற்குக் காரணமல்ல. இறந்தவரின் கவனக்குறைவான செயலால் விபத்து ஏற்பட்டது. 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கக் கடமைப்பட்டவர் அல்ல. 1ம் மனுதாரர் திருமணமானவர் என்றும், அவர் தனது கணவருடன் வசித்து வருகிறார் என்றும், அவர் இறந்தவரின் வருமானத்தை நம்பி வாழவில்லை என்பதும் தெரியவருகிறது. மனுவின் பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரரால் கோரப்பட்ட இழப்பீடு மிகவும் மிகையானதாகவும். எனவே மனுவானது 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:37 +0530

9. மேற்படி அசல் மனுக்களில் மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினைகள் –

1. இந்த இரண்டு வழக்குகளில் குறிப்பிட்ட வாகன விபத்தானது 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதாக கூறுவது சரியா?

2. மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு யாரால் கொடுக்கப்பட வேண்டும்?

3. MCOP.No.1/2018 மனுவில் மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீட்டின் அளவு என்ன?

4. MCOP.No.2/2018 மனுவில் மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீட்டின் அளவு என்ன?

10. இந்த அசல் மனுக்களான MCOP.No.1/2018 மற்றும் MCOP.No.2/2018 ஆகிய இருவழக்குகளையும் ஒன்றாக நடத்துவற்கு மனுதாரர்கள் தரப்பில் கடந்த 25.02.2020ம் தேதியன்று மெமோ தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில், மேற்படி மெமோவானது அதே தேதியில் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு மேற்படி இருஅசல்மனுக்களையும் ஒன்றாக நடத்தப்பட்டு, விசாரணையின்போது 3ம் மனுதாரர் செல்வம் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் ம.சா.1ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரைகள் மட்டும் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினாலும் மற்றும் அழைத்து ஆஜரில்லாத காரணத்தினாலும் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது. மனுதாரர்கள் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டு கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:42 +0530

<u>11. பிரச்சனை எண்.1–ற்கான தீர்வு :–</u>

1. இந்த வழக்கு வாகன விபத்து 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதாக கூறுவது சரியா?

i) இருதரப்பும் கேட்டப்பட்டன. மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்கள், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதுரை கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இந்த இரண்டு அசல் மனுக்களிலும் மனுதாரர்களின் இறந்துபோன தந்தை பாண்டியன் மற்றும் இறந்துபோன தாய் அம்சவள்ளி ஆகியோர் கடந்த 07.05.2016ம் தேதி 3ம் மனுதாரரின் வீட்டிற்கு வந்து தங்கி இருந்துவிட்டு 08.05.2016ம் தேதி அவர்களது சொந்த ஊருக்கு வழியனுப்புவதற்காக 3ம் மனுதாரர், அவர்களுடன் இரவு 11.15 மணிக்கு மகேந்திர வேர்ல்ட் சிட்டி சந்திப்புக்கு வந்தபோது அங்கு மனுதாரர்களின் பெற்றோர்கள் பேருந்து நிறுத்தத்திற்கு செல்வதற்காக செங்கல்பட்டு – தாம்பரம் சாலையை கடந்து பின்பு தாம்பரம்– செங்கல்பட்டு சாலையை கடக்க முயன்றபோது மனுவின் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN18–1706 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகா காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றாமலும் ஓட்டிவந்து மனுதாரர்களின் பெற்றோர் மீது மோதியதில் அவர்கள் இருவரும் தூக்கி எறியப்பட்டு ரத்த காயங்களுடன் கீழே விழுந்ததில் மனுதாரர்களின் தந்தைக்கு தலையிலும், இடதுகையிலும், ரத்தகாயம் ஏற்பட்டு உயிருக்கு போராடிகொண்டு இருந்தார் என்றும், மனுதாரர்களின் தாயாருக்கு இடதுபக்க தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், மனுதாரர்களின் தகப்பனாரும் சிறிது நேரத்தில் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் மனுதாரர்கள் தரப்பில் அசல் மனு மற்றும் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:48 +0530

ii) இந்த வழக்கின் விபத்து சம்பந்தமாக மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யபப்பட்டுள்ளது. மேற்படி முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கும்போது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரான முகமது முஸ்தாக் என்பவருக்கு எதிராக பிரிவுகள் 279 & 304(A) இதசவின் கீழ் தாக்கல் செய்யபட்டுள்ளது. மேலும் மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இம்மனுவில் கண்ட 3ம் மனுதாரர் செல்வம் என்பவர் புகார் கொடுத்ததாக அதில் துலங்ககிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையில் மேற்படி வாகன விபத்து மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டு நர் சம்பந்தமாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது.

> **"... நான் காஞ்சிபுரம் மாவட்டம் மகேந்திரா வேர்ல்ட் சிட்டியில் உள்ள வீராபுரம் கிராமத்தில் உள்ள சிட்டி யூனியன் பேங்க் மேலாளராக உள்ளேன். அதன்படி எனது சொந்த ஊரான மதுரை மாவட்டம், பேரையூர் தாலுக்கா, எம்.கல்லுப்பட்டி கிராமத்திலிருந்து என்னையும் என் மனைவியையும் காண கடந்த 07.05.2016 அன்று எனது பெற்றோரான திரு.கே.என்.பாண்டிய்,ன வ/54, த/பெ.தங்கபல் கருப்பையா தேவர் (எ) கருப்பையா தேவர், தாயார் அம்சவள்ளி பெ/வ/46 ஆகியோர் அதிகாலை சுமார் 5 மணிக்கு என் வீட்டிற்கு வந்தனர். எங்களுடன் இருந்துவிட்டு நேற்று 08.05.2016 அன்று இரவு சொந்த ஊருக்கு செல்ல திட்டமிட்டு இருந்தனர். எனது பெற்றோர் ஊருக்கு செல்லவேண்டி அவர்களை வழியனுப்பும் பொருட்டு நானும் அவர்களுடன் சேர்ந்து வீட்டிலிருந்து இரவு சுமார் 11.15 மணியளவில் புறப்பட்டு மகேந்திரா வேல்டு சிட்டி சந்திப்புக்கு வந்தபோது அங்கு எனது நண்பர்கள் ரத்தினவேல், மதன்ராஜ் இருவரும் அங்கு இருந்ததால் அவர்களிடம் நான் பேசிக்கொண்டு இருந்தேன். அப்போது என் பெற்றோர்கள் செங்கல்பட்டு – தாம்பரம் மார்க்கம் ஜி.எஸ்.டி**

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:52 +0530

சாலையை கடந்து தாம்பரம் – செங்கல்பட்டு ஜி.எஸ்.டி சாலையை மேற்கிலிருந்து கிழக்காக கடக்க முயன்ற போது தாம்பரம் – செங்கல்பட்டு மார்க்கமாக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த TN 18 7106 டாடா இண்டிகா கார் மோதியதில் இருவரும் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்தனர். உடனே நானும் ரத்தினவேல், மதன்ராஜ் ஆகியோர்கள் ஓடிப்போய் தூக்கி பார்த்தோம். என் தந்தைக்கு தலையிலும், இடது கையிலும் காயம் ஏற்பட்டு துடித்து கொண்டு இருந்தார். என் தாயாருக்கு இடது பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார். சிறிது நேரத்தில் என் தந்தையும் இறந்துவிட்டார். மோதிய கார் சிறிது தூரம் சென்றுசாலையின் ஓரம் நின்றது. அதன் ஓட்டுநர் திகைத்து போய் நின்றார். அவரிடம் கேட்ட போது அவர் பெயர் முகமது முஸ்தக், செங்கல்பட்டை சேர்ந்தவர் என கூறினார். இந்த விபத்து குறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுத்து பிரேதங்களை ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்..."

மேலும் மேற்படி குற்றவழக்கில் ம.சா.ஆ.7 குற்ற இறுதிஅறிக்கை 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரான முகமது முஸ்தாக் என்பவருக்கு எதிராக அவர் டாடா இண்டிகா காரை அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலையை கடக்க முயன்ற பாண்டியன், அம்சவள்ளி ஆகியோர்கள் மீது மோதி மரணத்தை உண்டுபண்ணியதாக செங்கல்பட்டு, நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 மாதிரிவரைபடம், ம.சா.ஆ.2 பார்வை மகஜர் ஆவணங்கள் விபத்து சம்பவ இடத்தையும், விபத்தின் தன்மையையும் தெளிவாக்கும் வகையில் அமைந்துள்ளது. 3ம் மனுதாரரின் சாட்சியம் மற்றும் மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கும்போது, மேலே குறிப்பிடும்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:10:56 +0530

வாகன விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரான முகமது முஸ்தாக் என்பவரின் அலட்சியத்தால் ஏற்பட்டது என்று அறியமுடிகிறது. எனவே ம.சா.1ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் மனுதாரர்கள் தரப்பில் குறியிடப்பட்ட ம.சா.ஆ.1, ம.சா.ஆ.7 ஆவணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வாகன விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்று முடிவு செய்து அவ்வாறே பிரச்சனை எண்.1ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>12. பிரச்சினை எண்2–ற்கான தீர்வு –</u>

2. மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு யாரால் கொடுக்கப்பட வேண்டும்?

i) இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட வாகன விபத்து குறித்து பதிவு எண்.TN 18 –1706 என்ற கார் வாகனம் இம்மனுவில் கண்ட 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்ற சங்கதி மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் மூலம் தெளிவாகிறது. மேலும் மேற்படி வாகனம் 02.07.2015 முதல் 01.07.2016 வரையிலான காலத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, அந்த காப்பீடு அமுலில் இருந்து வந்துள்ளது என்ற சங்கதி எவ்வித மறுப்புமின்றி 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தாக்கல் செய்த எதிருரையில் தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இம்மனுவில் சம்பந்தப்பட்ட வாகன விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவே காரணம் என இந்நீதிமன்றம் ஏற்கனவே பிரச்சனை எண்.1ல் தீர்வு கண்டுள்ள நிலையிலும், மேற்படி விபத்து சம்பந்தப்பட்ட TN 18 – 1706 என்ற எண் கொண்ட கார் வாகனமானது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்ற நிலையிலும், மேற்படி வாகன விபத்தானது மனுதாரர்களின் இறந்துபோன தாய், தந்தை ஆகியோர்களின் கவனக்குறைவினால் ஏற்பட்டது என்ற

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:00 +0530

சங்கதியை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தக்க சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையிலும், மனுதாரர்கள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றவாணங்கள் மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சியங்களின் வாயிலாக மனுச்சங்கதிகள் தெளிவாக நிரூபணமாகியுள்ள நிலையிலும், மேற்படி வாகனமானது விபத்தின் போது 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதை என்பதை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனமே தெளிவாக எதிருரையில் குறிப்பிட்டு ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், மனுதாரர்கள் தரப்பில் குறியிடப்பட்ட ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் அடிப்படையிலும், மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்காக காப்பீட்டு நிறுவனம் என்ற அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரரே மேற்படி விபத்து சம்பந்தமாக இம்மனுவின் மனுதார்களுக்கு இழப்பீடு வழங்க சட்டப்படி கடமைப்பட்டவர் என்று முடிவு செய்து அவ்வாறே பிரச்சினை எண்.2 ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>**13.பிரச்சனை எண்கள்.3 மற்றும் 4–ற்கான தீர்வு :–**</u>

3. MCOP.No.1/2018 மனுவில் மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீட்டின் அளவு என்ன?

4. MCOP.No.2/2018 மனுவில் மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீட்டின் அளவு என்ன?

i) இந்த மனுக்களில் சம்பந்தப்பட்ட விபத்தில் இறந்துபோன பாண்டியன் என்பவருக்கு விபத்தின்பொழுது 54 வயது மற்றும் இறந்துபோன அம்சவள்ளி என்பவருக்கு 46 வயது என்றும், அவர்கள் இருவருக்கும் தனித்தனியாக சுமார் 10 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் மற்றும் சுமார் 20 ஏக்கர் நிலத்திற்கும் அதிகமான நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயம் செய்து வந்ததோடு தனியாக பால்பணையும் நடத்தியும், இருவரும் தலா மாதம்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:04 +0530

ரூ.20,000/−க்கு மேல் சம்பாதித்து வந்தார்கள் என்அசல் மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஷை நபர்களுக்கு இறக்கும்போது முறையே 54 மற்றும் 46 என்று மனுதாரர்கள் தரப்பில் அசல் மனுக்களில் குறிப்பிட்டும், மேலும் அதை நிரூபணம் செய்யும் வகையில் மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 பிரேத பரிசோதனை அறிக்கைகளிலும் மனுதாரர்களின் இறந்துபோன தந்தையான பாண்டியனின் வயது 54 என்றும், மற்றும் இறந்துபோன தாயாரின் வயது 46 என்றும் தெளிவாக குறிப்பிட்டுள்ளதை இந்த அசல் மனுக்களைப் பொறுத்து இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது. இந்நிலையில் பின்வரும் வழக்கில் இறந்துபோன நபரின் வயது சம்பந்தமாக தீர்ப்பாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை பற்றி குறிப்பிட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனகமாக கருத்திற் கொள்கிறது.

2015(1) TN MAC 785 (SC)

Shashikala & others

VS

Ganalakshmamma & another

"the completed age of the deceased is to be taken for calculation"

மேற்படி தீர்ப்பின் அடிப்படையிலும், ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 பிரேத பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையிலும், மேற்படி வாகனவிபத்தில் இறந்துபோன பாண்டியனின் வயது **54** மற்றும் இறந்துபோன அம்சவள்ளியின் வயது **46** வயது என்று முடிவு செய்யப்படுகிறது. இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் மனுதாரர்களின் இறந்துபோன பெற்றோர்களான பாண்டியன் மற்றும் அம்சவள்ளி ஆகியோர் தனித்தனியாக சுமார் 10 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் மற்றும் சுமார் 20 ஏக்கர் நிலத்திற்கும் அதிகமான நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயம் செய்து வந்ததோடு தனியாக பால்பணையும் நடத்தியும், இருவரும் தலா மாதம் ரூ.20,000/−க்கு மேல் சம்பாதித்து வந்தார்கள்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:08 +0530

என்று மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டு வாதிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இறந்துபோன மேற்படி பாண்டியன் மற்றும் அம்சவள்ளி ஆகியோர்களின் வருமானம் சம்பந்தமாக மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.9 சாகுபடி அடங்கல் ஆவணம் மற்றும் ம.சா.ஆ.10 கணினி பட்டா ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதன்படி மேற்படி இறந்துபோன பாண்டியன் மற்றும் அம்சவள்ளி ஆகியோர்கள் பெயரில் நிலங்கள் உள்ள சங்கதி தெளிவாகிறது. ஆனால் அந்த நிலங்களில் இருந்து மேற்படி நபர்களுக்கு வருமானம் வந்தது என்ற சங்கதி மனுதாரர்கள் தரப்பில் உரிய வருவாய் அலுவலர்களை விசாரணை செய்து நிரூபணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் இங்கு கவனமாக கருத்திற் கொள்கிறது. மேலும் மேற்படி ஆவணங்கள் சம்பந்தமாக ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட 3ம் மனுதாரர் தனது சாட்சிய விசாரணையில் பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **“... எனது பெற்றோர்கள் 20 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து அனுபவம் செய்து வருவதை காண்பிக்க குத்தகை ஒப்பந்தம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் அவ்வாறு யாரிடம் நிலங்களை குத்தகைக்கு எடுத்துள்ளார்கள் என்ற விவரம் கூட எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் பால்பண்ணை நடத்தி வந்ததாக கூறும் நிலையில் அதுகுறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் பால்பண்ணை நடத்தி வருவதாகவும், நிலங்களை கட்டுகுத்தகைக்கு எடுத்து அனுபவம் செய்து வந்ததாகவும் கூறியுள்ள விவரங்கள் வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல... ம.சா.ஆ.10 எனது பெற்றோர்களுக்கு அதில் உரிமை உள்ளதை காட்டாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10ன் படி பட்டா**

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:12 +0530

எண்.1903 என்ற நிலங்கள் ராமராஜ் மனைவி கலா பிரபாவதி என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.10ன்படி எனது தந்தைக்கு எவ்வளவு உரிமைப்பட்டது என கூறமுடியாது என்றால் சரியல்ல...”

ii) இந்த நிலையில் மனுதாரர்களின் இறந்துபோன பெற்றோர்கள் மேற்படி வாகன விபத்திற்கு முன்பு தனித்தனியாக சொந்தமாக 10 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 20 ஏக்கர் நிலத்திற்கும் அதிகமான நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயம் மற்றும் பால்பண்ணை நடத்தி வந்தனர் என்றும், அந்த அடிப்படையில் மேற்படி இருவருக்கும் மாதம் 1க்கு ரூ.20,000/- வருமானம் வந்தது என்றும் அசல் மனுக்களில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரர்கள் தரப்பில் தக்க சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்த வழக்குகளில் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.. இவ்வாறான சூழ்நிலைகளில் மேற்படி இறந்துபோன நபர்களின் தோராய வருமானத்தை இந்நீதிமன்றம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

iii) இந்நிலையில் தோராய வருமானம் சம்பந்தமாக இந்நீதிமன்றம் பரிசீலித்த மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற பின்வரும் தீர்ப்புகளை இந்நீதிமன்றம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

<u>1) 2023(2) TN MAC 490</u>

M.Selvi & others

VS

D.Selvam & another

"INCOME – LOSS OF INCOME – Assessment – Deceased, aged 65 yes., an Agricultural Coolie, earning Rs.500 per day as per claim – Tribunal fixing monthly income, deducted 50% towards Personal Expenses – Fixing age of 70 yrs., as against 75 yrs.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:16 +0530

Fixed by Tribunal, High Court applied Multiplier of 5 – Loss of Income/Dependency awarded at Rs.3,37,500/- as against Rs.3,00,000/-.

2) 2023(2) TN MAC 694
United India Insurance Co, Ltd
VS
Balasubramaniyan & another

"MOTOR VEHICLES ACT, 1988 (59 of 1988), Section 166 – Compensation under – Determination – Deceased, aged 70 yrs., doing Handicraft work, earning Rs.20,000/- p.m. as per claim – Notional Income fixed at Rs.6,000/- p.m., confirmed. "

iv) இந்த சூழ்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **"Andal and Others -Vs- Avinav Kannan, reported in 2019 (1) TNMAC 54 (DB)"** என்ற வழக்கில் தோராய வருமானம் கணக்கீடு செய்வது சம்பந்தமாக பின்வரும் அட்டவணையை வழங்கியுள்ளது.

S.No	Financial Year	Cost of Inflation Index
1	2001-2002	100
2	2002-2003	105
3	2003-2004	109
4	2004-2005	113
5	2005-2006	117
6	2006-2007	122
7	2007-2008	129
8	**2008-2009**	**137**
9	2009-2010	148
10	2010-2011	167
11	2011-2012	184

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:22 +0530

12	2012-2013	200
13	2013-2014	220
14	2014-2015	240
15	2015-2016	254
16	**2016-2017**	**264**
17	2017-2018	272
18	2018-2019	280
19	2019-2020	289
20	2020-2021	301
21	2021-2022	317
22	2022-2023	331

மேற்படி தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி 2016–2017 ம் ஆண்டுக்குரிய Cost of inflation Index –264 ஆகும். வாகன விபத்தானது 08.05.2016 ம் தேதியில் ஏற்பட்டுள்ளது. இறந்துபோன மனுதாரர்களின் பெற்றோர்கள் கடந்த 2016 ம் வருடம் விபத்தில் இறந்துபோனதைக் கருத்தில்கொண்டும், அவர்களது வயது மற்றும் தொழிலைக் கருத்தில் கொண்டும் இறந்துபோன பாண்டியனின் மாத வருமானம் **6500x264/137 = Rs.12,525.54/–** மற்றும் அதன் முழுமையான மதிப்பு **ரூ.12526/–** எனவும், அதைப்போல் இறந்துபோன அம்சவள்ளியின மாத வருமானம் **6500x264/137 = Rs.12,525.54/–** மற்றும் அதன் முழுமையான மதிப்பு **ரூ.12526/–** எனவும்,இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது.

v) மாண்புமிகு உச்சநீதிமன்றம் **2017(2) TNMAC 609(SC) – National Insurance Co Ltd., Vs Pranay Sethi and others** என்ற வழக்கில் இறந்துபோன நபரின் வருமானத்தில் எதிர்கால ஊதிய உயர்வினை கருத்தில் கொள்ள வேண்டும் என பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"While determining the income, an addition of 50% of actual salary to the income of the deceased towards future prospects, where the

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:27 +0530

deceased had a permanent job and was below the age of 40 years, should be made. The addition should be 30%, if the age of the deceased was between 40 to 50 years. In case the deceased was between the age of 50 to 60 years, the addition should be 15%. Actual salary should be read as actual salary less tax.

(iv) In case the deceased was self-employed or on a fixed salary, an addition of 40% of the established income should be the warrant where the deceased was below the age of 40 years. An addition of 25% where the deceased was between the age of 40 to 50 years and 10% where the deceased was between the age of 50 to 60 years should be regarded as the necessary method of computation. The established income means the income minus the tax component."

மேற்படி மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், இறந்துபோன பாண்டியனின் வயது 54 என்ற அடிப்படையிலும், அவரது வருமானத்தில் **10%** கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் **(12526 X 10/100=1252/-)** எனவே **ரூ.12526/- + 1252 = ரூ.13,778/-** மாத ஊதியம் எனவும், இறந்துபோன அம்சவள்ளியின் வயது 46 என்ற அடிப்படையிலும், அவரது வருமானத்தில் **25%** கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் **(12526 X 25/100=3131/-)** எனவே **ரூ.12526/- + 3131 = ரூ.15,657/-** மாத ஊதியம் எனவும் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

vi) இந்நிலையில், இறந்துபோன நபரின் மாத வருமானத்தில் எவ்வளவு கழிக்க வேண்டும் என்பது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Smt.Sarla Varma Vs. Delhi Transport Corporation [2013 (1) TNMAC 481 SC 481]** என்ற வழக்கில்

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:31 +0530

பின்வருமாறு குறிப்பிட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது.

"Personal expenses – Deduction of – Standards prescribed in Paras 30 to 32 of Sarala Varma to be followed subject to observations in para 38 of instant judgment".

Where deceased was married

No. of dependent family members	Deduction
2 to 3	1/3rd
4 to 6	**1/4th**
Above	1/5th

இவ்வழக்கில் இறந்துபோன பாண்டியன் மற்றும் அம்சவள்ளி இருவரும் திருமணமானவர்கள் என்பதையும், அவர்கள் இருவரும் கணவன், மனைவி என்பதையும், அவர்கள் இருவரும் தங்களது மகள், மகன்களை விட்டுவிட்டு இறந்துள்ள சூழ்நிலையிலும், மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுடைய சொந்த செலவுக்கு 1/4 பங்கு ஊதியம் கழிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. **(13778 – 1/4=3445) 13778 – 3445 = 10333/–** எனவே இறந்துபோன பாண்டியனின் மாத வருமானம் **ரூ.10333/–** எனவும், **(15657 – 1/4 = 3914), ரூ.15657 – 3914 = 11743/–** எனவே இறந்துபோன அம்சவள்ளியின் மாத வருமானம் **ரூ.11743/–** எனவும் முடிவு செய்யப்படுகிறது.

v) மாண்புமிகு உச்சநீதிமன்றம் இறந்துபோன நபரின் வயது மற்றும் அதற்குரிய பெருக்கல் காரணி **[Multiplier]** சம்பந்தமாக பின்வரும் அட்டவணையை வழங்கியுள்ளது.

Age Group	Multiplier
15-20	18
21-25	18

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:35 +0530

26-30	17
31-35	16
36-40	15
41-45	14
46-50	**13**
51-55	**11**
56-60	9
61-65	7
Above 65 years	5

மேற்படி இறந்து போன பாண்டியன் என்பவருக்கு விபத்தின் போது 54 வயது என்பதால் மேற்படி Sarala Varma தீர்ப்பின் அடிப்படையில் அதற்கான பெருக்கல் காரணி **11** என்றும், இறந்துபோன அம்சவள்ளிக்கு விபத்தின்போது 46 என்பதால் மேற்படி Sarala Varma தீர்ப்பின் அடிப்படையில் அதற்கான பெருக்கல் காரணி **13** என்றும், முடிவு செய்யப்படுகிறது. எனவே இறந்துபோன பாண்டியன் என்பவரின் வருமான இழப்பு **ரூ.10333/- X 12 X 11 = ரூ.13,63,956/-** என்றும், இறந்துபோன அம்சவள்ளி என்பவரின் வருமான இழப்பு **ரூ.11743/- X 12 X 13 = ரூ.18,31,908/-** என்றும் முடிவு செய்யப்படுகிறது.

vi) இந்த நிலையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வரும் வழக்கில் Funeral Expenses மற்றும் Consortium சம்பந்தமாக குறிப்பிட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனமாக கருத்திற் கொள்கிறது.

<u>2017 ACJ page 2700</u>

National Insurance Company Limited
Vs
Praney Sethi and others

"(viii) Reasonable figures on conventional heads, namely, loss of estate, loss of consortium and funeral expenses should be Rs.15,000/-

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:38 +0530

Rs.40,000/- and Rs.15,000/- respectively. The afore said amounts should be enhanced at the rate of 10% in every three years"

மேற்படி தீர்ப்பின் அடிப்படையில், இந்த இரண்டு அசல்மனுக்களில் மனுதாரர்கள் இறந்துபோன நபர்களின் மகன்கள் மற்றும் மகள் என்ற முறையில் தலா **ரூ.40,000/-** Parental Consortium என்ற தலைப்பின்கீழ் இழப்பீடு பெற தகுதியானர்கள் என்றும், மேலும் வசதி இழப்பீட்டிற்காக **ரூ.16,500/-,** மற்றும் ஈமகிரியை செலவுகளுக்காக **ரூ.16,500/-** மனுதாரர்கள் பெறத் தகுதியானவர்கள் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

MCOP.No.1/2018

1	Loss of dependency	13,63,956/-
2	Loss of Estate	16,500/-
3	Loss of consortium (3X 40,000)	1,20,000/-
4	Funeral Expenses	16,500/-
	Total award amount	Rs.15,16,956/-

MCOP.No.1/2018

1	Loss of dependency	18,31,908/-
2	Loss of Estate	16,500/-
3	Loss of consortium (3X 40,000)	1,20,000/-
4	Funeral Expenses	16,500/-
	Total award amount	Rs.19,84,908/-

எனவே மனுதாரர்களுக்கு இருவழக்களிலும் மேலே குறிப்பிட்டுள்ளபடி இழப்பீடு தொகைகள் உரிய வட்டியுடன் நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சினை எண்கள்.3 மற்றும் 4ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:41 +0530

14. M.C.O.P.No.1/2018

முடிவாக,

1. மனுதார்களின் மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாரர்களுக்கு, 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடாக ரூ.15,16,956/- மற்றும் மேற்படி தொகைக்கு மனு தாக்கலான நாள் முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% பின்வட்டியுடன் சேர்த்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. மேற்படி இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் சேமிப்பு வங்கி கணக்கான, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கோவில்பட்டி கிளை, MACT, Account No.00000042891482655-ல் தேசிய மின்னணு நிதிபரிமாற்றம் [NEFT/RTGS] மூலம் செலுத்தி, அது சம்பந்தப்பட்ட விவரமானது இத்தீர்ப்பாயத்திற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
4. மேற்படி இழப்பீடு தொகையில் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு தலா 5,05,652/- கிடைக்கத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.
5. மனுதாரர்களுக்குரிய இழப்பீட்டு தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் 3 ஆண்டுகளுக்கு வைப்பீடு செய்து, அதில் வரும் வட்டியை மனுதாரர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:45 +0530

6. மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணமாக ரூ.373/− செலுத்தியுள்ளார்கள். மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்குரிய மீதி நீதிமன்ற கட்டணம் ரூ.14170/−ஐ இன்றிலிருந்து இரண்டு வாரத்திற்குள் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
7. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.22,170/− நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி தொகையை தேசிய மின்னணு நிதிபரிமாற்றம் [NEFT/RTGS] முறையில் செலுத்தப்பட வேண்டும்.
8. மனுதாரர்கள் மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை இத்தீர்ப்பாயத்தில் செலுத்தாதபட்சத்தில் மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாரர்கள் பெற்றுக்கொள்ள முடியாது என உத்தரவிடப்படுகிறது.
9. மனுதாரர்களின் தவறுகைக்காக அசல்மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்திற்குரிய வட்டியை மனுதாரர்கள் கோர முடியாது.

15. <u>M.C.O.P.No.2/2018</u>

முடிவாக,

1. மனுதாரர்களின் மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாரர்களுக்கு, 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடாக ரூ.19,84,908/− மற்றும் மேற்படி தொகைக்கு மனு தாக்கலான நாள் முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% பின்வட்டியுடன் சேர்த்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:54 +0530

3. **மேற்படி இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் சேமிப்பு வங்கி கணக்கான, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கோவில்பட்டி கிளை, MACT, Account No.00000042891482655-ல் தேசிய மின்னணு நிதிபரிமாற்றம் [NEFT/RTGS] மூலம் செலுத்தி, அது சம்பந்தப்பட்ட விவரமானது இத்தீர்ப்பாயத்திற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**
4. **மேற்படி இழப்பீடு தொகையில் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு தலா 6,61,636/- கிடைக்கத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.**
5. **மனுதாரர்களுக்குரிய இழப்பீட்டு தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் 3 ஆண்டுகளுக்கு வைப்பீடு செய்து, அதில் வரும் வட்டியை மனுதாரர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.**
6. **மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணமாக ரூ.373/- செலுத்தியுள்ளார்கள். மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்குரிய மீதி நீதிமன்ற கட்டணம் ரூ.18849/-ஐ இன்றிலிருந்து இரண்டு வாரத்திற்குள் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**
7. **வழக்கறிஞர் கட்டணமாக ரூ.26850/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி தொகையை தேசிய மின்னணு நிதிபரிமாற்றம் [NEFT/RTGS] முறையில் செலுத்தப்பட வேண்டும்.**
8. **மனுதாரர்கள் மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை இத்தீர்ப்பாயத்தில் செலுத்தாதபட்சத்தில் மேற்படி இழப்பீட்டுத்**

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:11:58 +0530

தொகையை மனுதாரர்கள் பெற்றுக்கொள்ள முடியாது என உத்தரவிடப்படுகிறது.

9. **மனுதாரர்களின் தவறுகைக்காக அசல்மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்திற்குரிய வட்டியை மனுதாரர்கள் கோர முடியாது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லச் சொல்ல அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிரதி எடுக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, கையெழுத்திடப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01 ம் தேதி புதன்கிழமை என்னால் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:12:02 +0530

இயக்க ஊர்தி விபத்துக்கோரிக்கை
தீர்ப்பாய நடுவர், கோவில்பட்டி

<u>பின் இணைப்பு</u>

மனுதாரர்கள் தரப்பு சாட்சி:-	1) ம.சா.1	செல்வம் [3 ம் மனுதாரர்]
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-	இல்லை	

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :-

வ.எண்.	நாள்	ஆவணங்களின் விபரம்
1.	-	முதல் தகவல் அறிக்கை நகல்
2.	-	பார்வை மகஜர் அறிக்கை

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:12:05 +0530

3.	–	பார்வை மகஜர் வரைபடம்
4.	–	மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை
5.	–	பாண்டியன் என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கை
6.	–	அம்சவள்ளி என்பவரின் பிரே பரிசோதனை அறிக்கை
7.	–	குற்ற அறிக்கை
8.	–	வாரிசு சான்று
9.	–	விவசாய நிலங்களின் சாகுபடி அடங்கல் கணக்கு நகல்
10.	–	விவசாய நிலங்களின் கணினி பட்டா நகல்

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.07.01 17:12:12 +0530

இயக்க ஊர்தி விபத்துக்கோரிக்கை
தீர்ப்பாய நடுவர், கோவில்பட்டி

சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி,
M.C.O.P.No.1/2018 &
M.C.O.P.No.2/2018
நேரிய உத்தரவு
நாள் : 01.07.2026